**செய்தி வெளியீடு எண்: 25/2022** **நாள்: 31.03.2022**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழா (Azadi ka Amrut Mahostav) மற்றும் தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, 'ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை' கலைக்குழுவினருடன் இணைந்து மெல்லிசை கலை நிகழ்ச்சியை பின்வரும் தேதிகளில் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடத்துகிறது.

| **தேதி** | **மெட்ரோ இரயில் நிலையத்தின் பெயர்** | **நேரம்** |
|---|---|---|
| 02.04.2022 (சனிக்கிழமை) | புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ | மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை |
| 09.04.2022 (சனிக்கிழமை) | விமான நிலையம் மெட்ரோ | மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை |
| 16.04.2022 (சனிக்கிழமை) | திருவொற்றியூர் தேரடி மெட்ரோ | மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை |
| 23.04.2022 (சனிக்கிழமை) | திருமங்கலம் மெட்ரோ | மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை |
| 30.04.2022 (சனிக்கிழமை) | கிண்டி மெட்ரோ | மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை |

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**